Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 23-10-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

**Tapioca will Fetch Good Price in October-November, 2013**

Tapioca or Cassava *(Manihot esculenta*), is cultivated in all tropical regions of the world and was produced in more than 80 countries with a production of 250 million tonnes during 2011-12, Major tapioca producing countries are Nigeria (37.5 million tonnes), Brazil (24.35 million tonnes), Indonesia (23.91 million tonnes) and Thailand (22.01 million tonnes). In tapioca cultivation, India ranks 17th in area, 9th in production, and first in productivity (34.75 tonnes/ha). Tapioca is cultivated in an area of 2.32 (lakhs ha) in India, with a total production of 8.06 million tons during 2011-12. In India the tapioca is largely cultivated in Tamil Nadu and parts of Kerala, Meghalaya, Assam and Andhra Pradesh. It is consumed both as freshly cooked tubers and processed food products like chips and sago. It also forms a component of animal and poultry feed. Industries use tapioca for producing starch, glucose and other food products. India ranks 8th place in tapioca export value led by Thailand, China and Vietnam during 2011-12. Indian export value has increased from 60.86 million (2006-07) to `95.64 million (2011-12). India exports two forms of tapioca raw tubers such as, frozen tapioca and raw tubers to the Middle East countries.

Tamil Nadu and Kerala are the two major tapioca growing States in India, together accounted for 88.65 per cent of total tapioca growing area in India. However, it is grown widely as a food crop in Kerala while it is grown mainly for industrial purposes in Tamil Nadu. In Tamil Nadu, tapioca is being cultivated over an area of about 1.20 lakh hectares covering many districts. The major districts cultivating tapioca are Dharmapuri (29.90 thousand ha), Namakkal (21.54 thousand ha), Salem (19.55 thousand ha), Villupuram (11.52 thousand ha) and Erode (8.69 thousand ha), accounting, for 70 percent of total area under tapioca during 2010-11. Besides the area under tapioca is said to be expanding to Trichy (5.88 thousand ha), Cuddalore (4.28 thousand ha), Karur (3.63 thousand ha) and Tiruvannamalai (3.50 thousand ha) districts. In Kanyakumari (3.54 thousand ha), district it is mostly used for culinary purposes.

In Tamil Nadu, tapioca is being cultivated under both irrigated (June-July) and rainfed (November-December) conditions coinciding with the South-West and North-East Monsoons, respectively. There are three hybrids of tapioca strains viz., White Rose (H-226), H-165 and Mulluvadi (MVD-1) are popular in Tamil Nadu and these three hybrids

are mainly planted for industrial use such as, sago and starch and they occupy more than 75 percent of total tapioca area in Salem, Dharmapuri and Namakkal Districts of Tamil Nadu.

Tapioca tuber is available for the industry from July to April but the peak period of raw material availability is only during the November to February period during which the starch content of the tubers is at its peak. Winter appears to be helpful for the consolidation of starch in the tubers. Maximum crushing activity is being undertaken during this period only. Tapioca is being used as a raw material for a number of value added industrial products such as starch, sago, glucose, dextrin, gums and fructose syrup. Liquid glucose and dextrose are widely used in food and pharmaceutical Industries. There are about 1,500 units manufacturing Sago and Starch in and around Salem.

Nowadays, most of the tapioca growers are switching over to other crops especially, maize cultivation. Hence, area and production of tapioca has declined during 2012-13. Under these circumstances, back office of Agro Marketing Intelligence and Business Promotion Centre (AMI&BPC) in Centre for Agricultural Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University has analysed the wholesale price of the last 10 years of Salem market to provide market intelligence for the tapioca grown in plains of major growing districts. The analyses revealed that the price for the harvested tubers would be Rs.9 to 10 per kg during October-November 2013. Accordingly, farmers are advised to take up their selling decision.

**For further details contact:**

Domestic and Export Market Intelligence Cell (DEMIC)
Centre for Agricultural and Rural Development studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore - 641 003.
Phone: 0422-2431405.

**For technical information farmers may contact,**

Professor and Head,
Department of Vegetable Crops,
Horticultural College& Research Institute,
Tamil Nadu Agricultural University,
Coimbatore - 641 003.
Phone: 0422-6611374,
0422-6611283.

Public Relations

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-10-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மரவள்ளிக்கிழங்கிற்கு வருகின்ற அக்டோபர்- நவம்பரில் நல்ல விலை கிடைக்கும்

உலகளவில் மரவள்ளிக்கிழங்கானது, எண்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில், பரவலாக பயிர்சாகுபடி செய்யப்பட்டு 250 மில்லியன் டன்களுக்கு மேலாக கிழங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. நைஜீரியா (37.5 மில்லியன் டன்கள்), பிரேசில் (24.35 மில்லியன் டன்கள்), இந்தோனேசியா (23.91 மில்லியன் டன்கள்) மற்றும் தாய்லாந்து (22.01 மில்லியன் டன்கள்) போன்ற நாடுகள், மிக அதிகமாக மரவள்ளி கிழங்கினை சாகுபடி செய்கின்றன.

உலகளவில் இந்தியா, மரவள்ளிக்கிழங்கு சாகுபடி பரப்பளவில் 17வது இடத்தையும், உற்பத்தியில் 9வது இடத்தையும் மற்றும் உற்பத்திதிறனில் (34.75 டன்கள்/எக்டர்) முதலிடத்தையும் பெற்றுள்ளது. இந்தியாவில், மரவள்ளி சாகுபடி பரப்பளவு 2.32 இலட்சம் எக்டர் ஆகவும், மொத்த உற்பத்தி 8.06 மில்லியன் டன்கள் ஆகவும் உள்ளது. மேலும் மரவள்ளிக்கிழங்கு கேரளா, மேகாலயா, அசாம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் பரவலாக பயிரிடப்படுகின்றது. இக்கிழங்கானது, வேகவைக்கப்பட்டு உணவாகவும், ஜவ்வரிசி, சில்லுகள் (சிப்ஸ்) போன்ற பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளாகவும், விரும்பி உண்ணப்படுகின்றது. மேலும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு தீவனங்களாகவும் பயன்படுகிறது. தொழிற்சாலைகள் மூலம் இக்கிழங்கில் இருந்து மாவு, குளுக்கோஸ் மற்றும் இதர பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியா 2011-12ல் மரவள்ளிக்கிழங்கு ஏற்றுமதியில் 8வது இடத்தை கொண்டுள்ளது. தாய்லாந்து, சீனா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் மரவள்ளி பொருட்கள் ஏற்றுமதியில் முன்னணி வகிக்கின்றன. இந்தியாவின் மொத்த மரவள்ளிக்கிழங்கின் ஏற்றுமதி மதிப்பு 2006-07ல் ரூ.60.86 மில்லியனிலிருந்து, 2011-12ல் ரூ.95.64 மில்லியனாக உயர்ந்துள்ளது. இந்தியா இக்கிழங்கினை, பச்சை கிழங்குகளாகவும் மற்றும் உறையவைக்கப்பட்ட கிழங்குகளாகவும், மத்திய கிழங்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களில், மரவள்ளிக்கிழங்கு அதிகமாக பயிரிடப்படுகிறது. இவ்விரண்டு மாநிலங்கள் சேர்ந்து இந்தியாவின் மொத்தச்சாகுபடி பரப்பளவில், 88.65 சதவீத்தை கொண்டுள்ளன. கேரளாவில் இக்கிழங்கு உணவு பொருளாகவும், தமிழ்நாட்டில் மதிப்பூட்டப்பட்ட வர்த்தகப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் இக்கிழங்கின் மொத்த சாகுபடி பரப்பளவு 1.20 இலட்சம் எக்டர் ஆகும். இதில் தருமபுரி மாவட்டம் (29.90 ஆயிரம் எக்டர்) ஆகவும், நாமக்கல் (21.54 ஆயிரம் எக்டர்), சேலம் (19.55 ஆயிரம் எக்டேர்), விழுப்புரம் (11.52 ஆயிரம் எக்டர்) மற்றும் ஈரோடு (8.69 ஆயிரம் எக்டர்) ஆகியன மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். மேற்கூறிய, மாவட்டங்கள் சேர்ந்து, தமிழ்நாட்டின் மொத்த மரவள்ளிக்கிழங்கின் சாகுபடி பரப்பளவில், எழுபது சதவீத பரப்பளவை கொண்டுள்ளன. மேலும், இக்கிழங்கு சாகுபடி, திருச்சிராப்பள்ளி (5.88 ஆயிரம் எக்டேர்), கடலூர் (4.28 ஆயிரம் எக்டேர்), கரூர் (3.54 ஆயிரம் எக்டர்) மற்றும் திருவண்ணாமலை (3.50 ஆயிரம் எக்டர்) போன்ற மாவட்டங்களில் சாகுபடி பரப்பளவு வெகுவாக அதிகரித்து வருகின்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலும், இக்கிழங்கு வகைகள் சமையல் நோக்கங்களுக்காக மட்டுமே பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில், மரவள்ளிக்கிழங்கு பயிரானது, மானாவாரி (ஜுன்-ஜுலை) மற்றும் இறவை (செப்டம்பர்- டிசம்பர்) பருவங்களிலும், பரவலாக பயிரிடப்படுகிறது. மூன்று வகை வீரிய ஒட்டு இரகங்கள் சாகுபடிக்கு அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே, H-226, H-165 மற்றும் முள்ளுவாடி (MVD-1) போன்ற வீரிய ஒட்டு இரகங்கள் பிரபலமானவையாகும். இவ்வகை கிழங்கு வகைகள் யாவும் பெரும்பாலும், தொழிற்சாலைகளில், மாவு மற்றும் ஜவ்வரிசி தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இம்மூன்று வீரிய ஒட்டு இரக வகைகளே சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் மொத்த மரவள்ளிக்கிழங்கின் பரப்பளவில், 75 சதவீதத்தை கொண்டுள்ளன.

தொழிற்சாலைகளுக்கு மரவள்ளிக்கிழங்கு வரத்து ஜுலை மாதத்திலிருந்து, ஏப்ரல் மாதம் வரை கிடைக்க பெறுகிறது. ஆனால், நவம்பர் முதல் பிப்ரவரி வரையுள்ள மாதங்களில், அதிகமான வரத்து கிடைக்கின்றன. இதற்குக்கான காரணம் குளிர்காலத்தில் கிழங்கின் மாவுச்சத்து அதிகமாக உள்ளதாகும். இதனால் இம்மாதங்களில் தொழிற்சாலைகளில் மரவள்ளிக்கிழங்கு வரத்து அதிகமாக உள்ளது.

மரவள்ளிக்கிழங்கானது, பலதரப்பட்ட பொருட்கள் தயாரிக்க அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும், இக்கிழங்கு முறையே, மாவு, ஜவ்வரிசி, குளுக்கோஸ், டெக்ட்ரோஸ், பிரக்டோஸ் போன்ற பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இதில் குளுக்கோஸ் மற்றும் டெக்ட்ரோஸ் போன்றவை உணவு மற்றும் மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகளில் பெரிதும் பயன்படுகிறது. சேலம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் மாவு மற்றும் ஜவ்வரிசி தொழிற்சாலைகள் 1500க்கும் அதிகமாக காணப்படுகின்றது.

இந்த சூழ்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் புள்பில அலுவலகம், கடந்த 10 வருடங்களாக மரவள்ளிக்கிழங்கு அதிகமாக பயிரிடப்படும் சேலம் மற்றும் அதனை சுற்றியுள்ள சமவெளி பகுதிகளில் விளைந்த கிழங்கிற்கு, சேலம் மொத்தச்சந்தைகளில் நிலவிய 10 வருட விலைப்பற்றிய ஆய்வு மேற்கொண்டது. அதன்படி, வருகின்ற அக்டோபர் முதல் நவம்பர் மாதம்வரை மரவள்ளிக்கிழங்கிற்கு விவசாயிகளுக்கு கிலோவுக்கு ரூ.9 முதல் ரூ.10 வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பகிறது.


<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003,
தொலைபேசி : 0422 -2431405

**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி: 0422-6611374, 0422-6611283

மக்கள் தொடர்பு அலுவலர்